605

உ

மாட்டுச்சுழி வாகடம்

என்னும்

லட்சண சாஸ்திரம்

★

ஆசிரியர் :

டி. ஆர். ராமச்சந்திரன்,
கும்பகோணம்.

★

வெளியிடுபவர் :
வி. ராமதாஸ்,
கும்பகோணம்.

1959 [அணா 4

முன்னுரை.

எல்லாம் வல்ல இறைவனுல் படைக்கப்பட்ட சீவராசிகளில் நம் மனிதர்களுக்கு எவ்வாறு உள்ளங் கைகளிலும் விரல்களிலும் கைரேகைகள் படர்ந்து இருக்கின்றனவோ அதேபோல, ஆண்டவனுல் படைக்கப்பட்ட கால்நடைகளுக்கும் உடலின் பல பாகங்களில் சுழிகள் இயல்பாகவே அமைந்துள்ளன. மனிதனுடைய தலைச் சுழியை மாற்றி அமைக்கவோ அல்லது அழிக்கவோ இயலாது என்னும் சித்தாந்தம் ஒருபுறமிருக்க மாடு வாங்குவோர் யாவரும் மாட்டுச் சுழிகளால் வாங்குபவருக்கு ஏற்படும் நன்மை தீமை யானபலன்களை சிந்தித்து வாங்குவது நல்லது என்றும் அவசியமென்றும் நம் முன்னேர்களின் கொள்கை ஆகும். மாடுகளைப் பற்றி நன்கு தெரிந்துள்ள அனுபவ சாலிகளும் அங்ஙனமே கூறுவர்.

சுழிகளை கவனித்தும், நிதானித்தும் நல்ல அம்ச மான சுழிகள் இல்லாவிட்டாலும் கெடுதலான சுழி கள் இல்லாத மாடுகளாகத்தான் நாம் வாங்க ஆசைப் படுகிறேம். இச்சிறு நூலில், நம் முன்னேர்கள் அனுபவத்தில் பார்த்து வந்த சுழி லட்சணங்களும், சில, பழைய ஏட்டுச் சுவடிகளிலிருந்தும் எடுத்து தொகுத்து எழுதப்பட்டிருக்கின்றன. தவிர மாடு களின் அங்க லட்சணங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் குறைகள் ஏதாவது காணப்படின் தயைசெய்து ஆசிரியரின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டால் வந்தனத்துடன் வரவேற்கிறேம். இந்நூலை அனைவரும் விரும்பி வாங்கி நல் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் இதனை வெளியிட்டுள்ளேன்.

டி. ஆர். ராமச்சந்திரன்,
கும்பகோணம்.

16—3—59.

1, நல்ல சுழியுள்ள மாடுகளும் அவற்றின் அடையாளங்களும்.

1. இருகண் சுழி

மாட்டின் இரு கண்களுக்கு மத்தியில் குறுக்காக இரண்டு சுழிகள் நேருக்கு நேராக இருக்கும்.

2. இரட்டைக் கவர்ச் சுழி

மாட்டின் முன் கால்களில் தட்டுகளில் இரு பக்க வாட்டிலும் முழங்கால்களுக்குமேல் நீளமாக பிளவுபட்டு இருக்கும். இந்தச் சுழி இருந்தால் நல்ல யோகத்தை கொடுக்கும்.

3 கொம்புத் தானி

அ இரு கொம்புகளுக்கும் அடிப்பாகத்தில் இருக்கும். இவ்வாறு அமைந்துள்ள மாடுகள் உள்ள கொட்டகையில் மாடுகள் மேலும் மேலும் விருத்தியாகும்.

ஆ. ஷை சொன்ன சுழியைப்போல நெற்றியின்மேல் நான்கு சுழிகளும் சில மாடுகளுக்கு இருக்கும். தென்னாட்டில் சில இடங்களில் இதனை நல்லது என்றும் சில பிரதேசங்களில் கெடுதல் என்றும் கூறுவார்கள்,

4. ஜெயலட்சுமி சுழி

கண்களின் புருவத்தை சேர்ந்தாற்போல அமைந்திருக்கும் ஷை சுழி உள்ள மாடு வைத்திருப்பவர்களுக்கு காரிய சித்தியும் கோர்ட்டு வியாஜ்ஜிய வழக்குகளில் வெற்றியும் கிட்டும். எதிரிகள் கீழ்ப்படிவார்கள், சத்ரு பயம் இருக்காது.

5. தாவணிச் சுழி

மாட்டின் தலைக்கும் முன்னங்கால்களுக்கும் மத்தியில் கழுத்திற்கு வலதுபக்கமாகவோ அல்லது இடதுபக்கமாகவோ இருக்கும். அப்படி சுழி உள்ள மாடுகள் இருக்கும் கொட்டகையில் மேலும் பல மாடுகள் சேர்ந்து விருத்தியாகும்.

6. நெற்றிச் சுழி

நெற்றியின் மத்தியில் தனித்து ஒரு சுழி இருக்கும். அவ்வாறு இருப்பின் நல்லது.

7. பாண்டவச் சுழி

நெற்றியின்மேல் ஐந்து (5) சுழிகள் சேர்ந்தாற்போல காணப்படும். நம் நாட்டில் இதனை பஞ்சபாண்டவச் சுழி என்றும் கூறுவர். இம்மாதிரி சுழி உள்ள மாட்டை உடைய வர்கள் சகோதர ஒற்றுமையுடன் இருப்பார்கள். இதனால் நன்மையே.

8. பட்டிச் சுழி என்னும் இடபச் சுழி

மாட்டின் கொண்டையின் உச்சியிலாவது, கொண்டை யின் முன்புற இறக்கத்திலாவது அமைந்திருக்கும். இப்படி அமைந்துள்ள மாடுகள் இருக்கும் இடத்தில் மேலும் மாடுகள் சேர்ந்து அபிவிருத்தியாகும். ஜோடியாக உள்ள மாடுகளில் இரண்டுக்கும் அவ்வாறு இருந்தால் மிகவும் நலமானது. இதனை கோபுர சுழி எனவும் அழைப்பர்.

9. பாசங்கச்சுழி

சிமிழிற்குக் கீழாக கழுத்தின் வலப் பக்கத்திலாவது இடப் பக்கத்திலாவது இருக்கும்.

10. விபூதிச் சுழி

மாட்டின் நெற்றியில் அழகாக நாமம் போட்டதுபோல அமைந்திருக்கும். அப்படி உள்ள மாடுகள் கண்ணுக்கு லெட்சணமாக இருக்கும். இச் சுழி உள்ள மாடுகள் சாது வாகவும், சாந்தகுணமுள்ளதாகவும் இருக்கும். இம்மாதிரி சுழி அமைந்துள்ள மாடுகள் இருக்கும் வீட்டில் தரித்திரமே இருக்காது. ஏழையாயிருப்பவன் அம்மாதிரி மாடுகளை வாங்கி னல் அவனை மிகவும் செல்வந்தனைகச் செய்யும்.

11. ராமா லட்சுமணுள் சுழி

மாட்டின் நெற்றியின் மேலும் கீழும் இல்லாமல் இரண்டு சுழிகளும் நேருக்கு நேராக ஒரு மயிர் இழைகூட தள்ளி இராமல் இரண்டு சுழிகள் அழகாக அமைந்திருக்கும், ஷ்டி சுழியானது மிக மிக உயர்வானது. ஜோடியாக உள்ள மாடுகள் இரண்டுக்கும் அவ்வாறு அமைந்திருந்தால் அப்படி உள்ள ஜோடி மாடுகளை வைத்திருப்பவருக்கு பல நல்ல பலன் களை கொடுத்துக்கொண்டே இருக்கும். அவர்களுக்கு ஒரு குறைவும் ஏற்படாது.

12. ராஜா, மந்திரி சுழி

மாட்டின், முதுகில் முள் எலும்பில் பிள்ளையார் சுழி இருந்து அதோடு நடு கொண்டையிலும் ஒரு சுழி அமைந்து இருந்தால் அதற்கு ராஜா, மந்திரி சுழி என்று பெயர். அம் மாதிரி அமைந்துள்ள மாடுகள் வைத்திருப்பவர்கள் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருப்பார். அவர்களுக்கு லெட்சுமி கடாக்ஷம் உண்டாகும்.

13. ஏறுநாகம்

மாட்டு வாலின் அடிப்பாகத்தில் அதாவது வாலின் உட் புறம் நல்ல பாம்பின் படத்தைப்போல மேல் நோக்கிச் சென் றிருக்கும், சாணி வாய்க்கும் கீழே தாரையில் நல்ல பாம்பின் படம்போல மேல்முகமாக ஏறி ஓடி காணப்படும். இது மிக நல்லது என்பார்கள்.

14. பூரான் சுழி

நீளமான ஒரு சுழி முதுகுப் பட்டைச் சரிவின்மேல் சுழித்து முதுகுக் கொண்டையை நோக்கி காணப்படும். இம்மாதிரி இருந்தால் மாட்டை வைத்திருப்பவர்களுக்கு யோகம் உண்டாகும்.

———

2. கெடுதலான சுழியுள்ள மாடுகளும் அவற்றின் அடையாளங்களும்.

1. இறங்குச் சுழி என்னும் அசைவுச் சுழி

திமிலேயின் இறக்கமாக முன்னங்கால் சப்பைகளின்மேல் திமிலேயின் இறக்கத்தில் இருக்கும் சுழி.

2. அடமாணச் சுழி

மாட்டின் முதுகின்மீது குறுக்கு வாட்டமாக ஒன்றுக்கு ஒன்று அருகாமையாக இருக்கும் இரண்டு சுழிகள்,

3. எச்சப்புள்ளி

மாட்டின் வாலுக்கு கீழாகவும் சாணி வாய்க்கு மேலாகவும் சிறியதொரு வெள்ளேப் புள்ளிபோல் காணப்படும். இது நல்லதல்ல.

4. ஏராச்சுழி

கீழ் வாய்க்கட்டையின் அடிப்புறத்தில் இருக்கும். இந்த மாட்டை உடையவர்கள் அடிக்கடி நோய் முதலியவைகளால் பாதிக்கப்படுவார்கள்.

5. கருடமுகம் என்னும் வெண்முகம்

மாட்டின் முகம் மாத்திரம் வெள்ளே நிறமாக இருக்கும். இம்மாதிரி உள்ள மாடுகளேப் பார்த்தாலே தனியாகத் தெரியும். இது உதவாது

6. குடைமேல் குடை

மாட்டின் நெற்றியில் இரட்டை சுழிகள் சற்று ஏறத் தாழ்வாக இருக்கும். அல்லது நெற்றியில் ஒன்றின் கீழ் மற்றென்ருகவும் காணப்படும். இம்மாதிரி காணப்படின் அம்மாடுகளே வைத்திருப்பவர்கள் பலவிதமான சஞ்சலங்களுக்கும் வ்யாகூலத்திற்கும் ஆளாகி கஷ்டப்படுவார்கள். ஆனல் இந்த சுழியை குறித்து ''கடைமேல் கடை கட்டினலும்

கட்டும், அல்லது இடிமேல் இடி விழுந்தாலும் விழும்'' என்பதாக நம் நாட்டில் அனேகர் கூறுவார்கள்.

7. கொண்டைச்சுழி

நெற்றிக்குமேல் மாட்டின் இரண்டு கொம்புகளுக்கும் மத்தியில் தலை உச்சியில் காணப்படும்.

8. கொள்ளிக்கால்

மாட்டின் ஒரு காலில் மாத்திரம் மாட்டின் உடல் நிறத்திற்கு வேறுபட்ட நிறமான மயிர்கள் காணப்படும். இது உதவாது.

9. செவிநாகம்

கன்னக்கட்டை ஓரமாக காதின் அடிப்பாகத்தில் மாட்டின் உடல் நிறத்திற்கு வேறுபட்ட நிறமாக நீண்டிருக்கும். கெடுதலானது. செவிப்பாம்பு என்றும் இதனைக் கூறுவர்.

10. கருநாகம்

கழுத்தில் மாலையைப்போல் மயிர் கருப்பு நிறத்துடன் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். இதனை அரிகண்டம் என்றும் கூறுவர். இம்மாதிரி உள்ள மாடுகள் வைத்திருப்பவர்களுக்கு கேடு விளையும் என்று சொல்லுவார்கள்.

11. இறங்குநாகம்

வாலின் அடிப்பாகத்தில் நல்லபாம்பின் படம்போல இறங்கு முகமாக கீழாக ஓடி இருக்கும். அதேபோல சாணி வாய்க்கு கீழே தாரையில் நாகப்படம் போல் இருக்கும்.

12. நுகமுளத்தான் சுழி என்னும் நுகமுட்டுச் சுழி

கழுத்தில் நுகம்முட்டும் இடத்தின்மேல் ஒற்றைச் சுழி அல்லது இரட்டையான சுழிகள் மேல்கீழாக அமைந்திருக்கும்.

13. நீர்ச்சுழி

நீர் பாதைக்கு சரிநேராக முதுகின்மேல் காணப்படும். இந்தச்சுழி உள்ள இடத்தில் கை விரலினால் சற்று அழுத்தினால் மாடு உடனே நீர்விடும். இது ஒரு அடையாளம்.

14. முன்பாடை பின்பாடை

மாட்டின் பின்புறம் சப்பையில் வாலை நோக்கியோ அல்லது தலைப்பக்கமாகவோ நீளமாக சுழித்துக்கொண்டு இருக்கும்.

15. பெண்டிழந்தான் சுழி

மாட்டின் ஆசனவாய்க்கு மேலாக வாலின் அடிப்பாகத்தில் ஏதாவது ஒரு பக்கவாட்டிலோ அல்லது இரண்டு பக்கங்களிலோ அகண்டு சூனியமாகக் காணப்படும். இம்மாதிரி சுழி உள்ள மாட்டின் சொந்தக்காரரின் தாரத்திற்கு (மனைவிக்கு) மரணகண்டம் என்று சொல்லுவார்கள்.

16. அக்கினிச் சுழி

மாட்டின் இரு கண்களுக்கும் இடையில் மூன்று சுழிகள் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல் முக்கோண வடிவமாக ஒன்றுக்கொன்று எதிர் எதிராகவோ அல்லது மேல் நோக்கியாவது அமைந்திருக்கும். இம்மாதிரி இருந்தால் அதை வைத்திருப்பவரும் அவருடைய குடும்பத்தாரும் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். இதை ''முக்கண் சுழி'' என்றும் கூறுவர்.

17. வால்மடக்கிச் சுழி

வாலின் உள் பக்கத்திலாவது வாலின் ஓரத்திலாவது வாலின் மேல்புறத்திலாவது நீளமாகவும் சன்னமாகவும் காணப்படும். நமது தென்னாட்டில் ''வால் மடக்கிச் சுழி ஏர் மடங்கிப் போகும்'' என்று பழமொழிகூட சொல்வதுண்டு.

18. விலங்குச் சுழி

மாட்டின் முன் காலின் குளம்புக்கு மேல் பாகத்திலும், பின்னைக்குளம்பின் கீழ்பாகத்திலும் இரண்டு சுழிகள் சுழித்து இருக்கும். இதனை பூட்டு விலங்கு என்றும் சொல்லுவார்கள். மிகவும் கெடுதலானது. இப்படி உள்ள மாடு வைத்திருப்பவர்கள் சிறைவாசம் செய்ய நேரிடும் என்பார்கள்.

19. பூவால்

மாட்டு உடலின் இதர இடங்களில் இல்லாமல் வாலின் நுனியில் மட்டும் மயிர்கள் வெள்ளை நிறமாக இருக்கும். ''மயிலை வெடிவால் மன்னவனுக்காகாது'' என்று நம் நாட்டவர் கூறுவர்.

20. ஆள்பார்த்த பூரான் சுழி

நீளமான ஒரு சுழிசுழித்து முதுகுப் பட்டைச் சரிவில் வாலை நோக்கி நீண்டிருக்கும்.

21. மண்டை விலங்கு

மாட்டின் இரு கண்களுக்கும் மேலே கண் இமைப் புருவத்தின் பேரில் இரண்டு சுழிகள் தனித்தனியாக சுழித்து இருக்கும். இது ஆகாது என்று சொல்லுவார்கள்.

முன் சொன்ன மாட்டின் முக்கியமான சுழி அமைப்புக்களைத் தவிர கீழே குறிக்கப்பட்டுள்ள சுழிகளையும் சில அனுபவசாலிகள் கூறுவார்கள். அவைகளாவன :—

ஒற்றைச்சுழி

மாட்டின் வாலின் மேல் புறத்தில் நீளமாக மயிர்கள் வளர்ந்து காணப்படும். இதனால் அவ்வளவு பாதகமில்லை என்று பலர் அபிப்பிராயப்படுவார்கள்.

கவர்ச்சுழி

முன்னங்கால்களில் ஏதேனும் ஒரு காலில் ஒரு பக்கத்தில் மாத்திரம் நீளமாக சுழி பிரிந்ததுமாதிரி ஓடியிருக்கும். இதனை

243
10-7

பறவைச்சுழி என்றும் சிலர் கூறுவர். கெடுதலானது அல்ல என்று சிலர் கூறுவர்.

தடிமறை

உடலின்மேல் பல பாகங்களில் தேரை தடிப்புகள் மாதிரி தெரியும். இப்படி உள்ள மாடுகளுக்கு வேலைசெய்யும்போது அடிக்கடி சோர்வு ஏற்படும் என்பார்கள்.

தாரைச்சுழி

அடிவயிற்றில் மூத்திர தாரைக்கு நேர் எதிராக அமைந்திருக்கும் இந்த சுழி உள்ள சில மாடுகள் குடும்பத்தை நல்ல நிலைமையில் விருத்திசெய்யும். சில மாடுகள் குடும்பத்தை சிறுமைப்படுத்தும் என்று சொல்லுவார்கள்.

பணப்புள்ளி

உடல் பூராவும் வட்டம் வட்டமாக ஒரு ரூபாய் நாணயத்தைப்போல வெண்ணிற புள்ளிகள் காணப்படும். சில மாடுகளுக்கு இம்மாதிரி இருப்பது கொஞ்ச நாட்களில் மாறி அமையும். இப்படி இருப்பதால் நன்மையே தவிர கெடுதல் இல்லை என்று அநேகர் கூறுவார்கள்.

நல்ல சுத்தமான உடல் அமைப்புள்ள மாடுகள்.

1. மிருதுவான சிவந்த நாக்கு, அண்ணம், சிறிய நேராக உள்ள காதுகள், ஒடுக்கமாக நன்கு அமைந்த வயறு, சிவந்த வலிவான குளம்புகள், வன்மை பொருந்திய மார்பு, கொழுத்த கொண்டை, மிருதுவான மயிர், மெல்லிய சிவந்த கொம்புகள், பூமிவரையில் தொங்கும் பருமனில்லா வால், சிவந்த கடைக்கண்கள், நிதானமான சுவாசம், பலமுள்ள தோள் பட்டைகள், சிறிய பின் துடைகள், மெல்லிய அலைதாடி முதலானவை இருந்தால் விரைவாய் செல்லக்கூடிய நல்ல மாடுகளாகும்.

2. மாட்டின் இடப்பக்கத்தில் சுழித்தரோமங்கள் இடம் புரியாகவும், (counter-clockwise) வலப்பக்கமுள்ளவை வலம்புரியாகவும் (clockwise) கணுக்கால்கள் மானின் கணுக் கால்களைப்போலவும், வெண்ணிறக் குளம்புகளும், வெண்ணிற வால் குஞ்ச மயிருமுடைய மாடுகள் மிகச் சிறந்தவையாகும்.

3. நீர்க்குமிழி யொத்த கண்கள், வெடிப்பில்லாத குளம்புகள், அடர்தியாயுள்ள இமை மயிர்களுள்ள மாடுகள் சுலபமாக சுமைதாங்கும்.

4. நாசியின் நுனிகளில் மடிப்புள்ளதாயும், பூனை முகமும் மல்லிகை அல்லது தாமரை நிறம் உடம்பின் வலப்பக்கம் படர்ந்தும் உள்ள மாடுகள் அசுவ வேகமுடையவை.

5. காய்கள் சமமாக நீண்டு தொங்கிக்கொண்டும், வயிறு ஆட்டின் வயிறு போலவும். மார்பு குறுகியும், பின் பட்டை குறுகியுமிருந்தால் நிச்சயமாக நிறைய பளுவைத் தூக்கிக்கொண்டு குதிரைக்குச் சமானமாக ஓட வல்லது-

6. வெள்ளை மாடுகளுக்கு பழுப்புநிறக் கண்களும், தாமிர வர்ணக் கொம்புகளும், விசாலமான வாயும் இருந்தால் அவைகளுக்கு 'அன்னம்' என்று பெயர். அது க்ஷேமம் அதிருஷ்டம் இவைகளைத் தரத்தக்கது.

7. பூமிவரையில் தொங்கும் வாலும், சிவந்த கண்களும். கொம்புகளும், விசாலமான கொண்டையும், வெண்ணிறம், மஞ்சள் நிறங்கலந்த மேனியுமிருந்தால் உடையோனைப் பெருஞ் செல்வனாக்கும்.

8. நான்கு கால்களில் ஏதேனும் ஒருகால் வெண்மையா யிருந்தாலும் அவைகளை நல்ல ஜாதிமாடுகள் என்று சொல்லு வார்கள்.

வண்டிமாடு, பந்தயமாடு இவைகளுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட மருந்துகளை அவ்வப்போது வேண்டிய சமயங்

களில் பிரயோகித்தும் சமனப்படுத்துவதற்கான உத்தாரண மும் கொடுத்தால் இம் மருந்துகள் விசேஷ பலனை அளிக்க வல்லது.

1. மாடுகள் நிறம்கொடுத்து பளப்பளப்பாக:

செருச்சின்னியிலையும், உப்பும் சேர்த்து ஏழு நாளைக்கு கொடுக்க மாடு நிறங்கொடுத்து பளப்பளப்பாக இருக்கும்.

2 நாக்கில் தடவ (சாட்டு):

நாக்கில் இவைகளைத் தடவினால் சுறுசுறுப்பாக விரைவாக வும் ஓடும்.

1. மிளகு பலம் 1, உப்பு பலம் 1, தழுதாழை இலை பலம் 2, இவைகளை இடித்து ஏழு நாளைக்கு காலையில் நாக்கில் தடவவும்.

2. கரையான் பூச்சி 2, தென்னம்வண்டு 2, பறக் காக்கையின் கண்கள் 2, அதன் மூளை 2, கோரோசனை விராக னிடை 2, அபின் விராகனிடை 2, எட்டிக்கொட்டைப் பிசின் விராகனிடை 2, மலைவேம்புப் பிசின் விராகனிடை 2, இஞ்சி இலை சேர் ½, கசகசா சேர் ½, இவைகளைக் கல்வத்தில் போட்டு அரைத்துச் சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து சிவந்த தும் இறக்கி மாத்திரைகளை கடலை அளவு செய்து, வண்டியில் போகும் பொழுது உரைத்து நாக்கில் தடவவும். (உ-ம்) தேங்காய்ப் பால் அல்லது வெங்காயச் சாறு கொடுக்கவும். மூக்கை நன்றாகக் கழுவிவிடவும்.

3. அபின் விராகனிடை 1, மதனகாமாட்சிப்பூ விராக னிடை 1, சுக்கு விராகனிடை ½, வெங்காரம் விராகனிடை ½, சர்க்கரை விராகனிடை ½, நெய் விராகனிடை ½, நெய்யில் மதனகாமாட்சிப்பூவை வறுத்து மற்றவைகளை நெய்விட்டு அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும். வேண்டும் பொழுது நாக்கில் தடவ மாடு விரைவாகும்.

3. நசியம் (சகல உபயோகத்திற்கும்):

பச்சைப் புகையிலைச்சாறு $\frac{1}{2}$ சேர், பச்சைமிளகாய்ச் சாறு சேர் $\frac{1}{4}$, நாய்ப்பால் சேர் $\frac{1}{8}$, கழுதைப்பால் சேர் $\frac{1}{8}$, வேப்பெண்ணெ சேர் $\frac{1}{2}$, எருக்கம்வண்டு 4, இவைகளைக் கல்வத்திலிட்டு சூரியபுடம் செய்தால் தூளாகும். வண்டியில் மாட்டை கட்டும்பொழுது நசியமிடவும்.

4. வண்டியில் ஓடும்பொழுது தளர்த்தியாக சாணம் போடுவதற்கு மருந்து:

தழுதாணியிலையாவது, நுணா இலைக் கொழுந்தாவது ஒரு பிடி வீதம் மூன்று வேளை கொடுத்தால் நிற்கும்.

5. புஷ்டிக்கு:

1. ஆண் சிட்டுக் குருவி 1, அக்கராகாரம், பச்சைக் கற்பூரம், சீனா கற்கண்டு, வால் மிளகு, ஏலம் வகைக்கு விராகனிடை 2, இவைகளை வெற்றிலைச் சாறு விட்டரைத்துக் கொடுக்கவும்.

2. மஞ்சள், கடுகு, கடுகு ரோகிணி, பூண்டு வகைக்கு பலம் 1, உப்பு படி $\frac{1}{2}$ இவைகளை இடித்துத் தூளாக்கி 10 கும் மட்டிக்காயை பிளந்து அதில் நிரப்பி மோர் படி $1\frac{1}{2}$-யில்போட்டு வெய்யலில் ஏழு நாளைக்கு வைத்து நாளைக்கு ஒரு கீற்றாகக் கொடுக்கவும்.

6. விரைவாகச் செல்ல மருந்து:

1. கருநாவி விராகனிடை 1, அபின் விராகனிடை 2, சாதிக்காய் பலம் 1, மதனகாமாட்சிப்பூ விராகனிடை 1, கருஊமத்தை வேர் பலர் $\frac{1}{2}$, தேங்காய் 1, பசும்பால் சேர் $\frac{1}{2}$.

2. வெள்ளரிவேர், ஊமத்தைவேர், வகைக்கு ஒரு சாண் துண்டு எடுத்துச் சாராயத்தில் 3-நாள் ஊறவைத்து, சாதிலிங்கம் விராகனிடை 3 எடுத்து வெங்காயச் சாற்றில் போட்டுக் கொதிக்கவைத்துப் பிசின் போலாகும்பொழுது இறக்கி, முன்

ஊறவைத்திருக்கும் சரக்குகளையெல்லாம் எடுத்துக் கொதிக்கும் வெங்காயச் சாறுடன் சாராயத்துடன் போட்டு வேக வைத்து எடுத்து அரைத்து ஒரு விராகனிடை பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 3 நாளைக்கு கொடுக்கவும்,

(உ-ம்,) வேளைக்கு $\frac{1}{8}$ சேர் வெண்ணெய் மூன்று நாள் கொடுக்கவும்.

7. விரேசனத்திற்கு (பேதிக்கு) மருந்து.

புரச விதையை சாணியில் ஊறவைத்து விராகனிடை $1\frac{1}{2}$ எடுத்து அரைத்துப் புகட்டினல் பேதியாகும் பச்சைத் தண்ணீர் காட்டவும். இரு மாதத்திற்கு ஒருமுறை கொடுத்தால் மாடுகளுக்கு நல்லது.

8. வெள்ளை, உருண்டை சகல ரோகங்களுக்கு

பெருங்காயம், இந்துப்பு, படிக்காரம், பொரித்த எண்ணெய், இஞ்சி, தேன் வகைக்குப் பலம் 1, இவைகளை நன்ருக நேக அரைத்து கழற்சிக்காயளவு உருண்டைகள் செய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும். வேண்டும் பொழுது ஒரு உருண்டை கொடுக்கவும். எல்லாவித வாயு, அசீரணம், மந்தம் இவை பறந்துபோகும்.

(உ-ம்.) வெண்ணெய் நாக்கில் நடவவும்.

9. விரைவுக்கு

நாகமல்லி வேர் $\frac{1}{2}$ சேர், அரளி வேர் சேர் $\frac{1}{2}$, கருஊமத்தை வேர் $\frac{1}{4}$ சேர், சிவழை வேர் சேர் $\frac{1}{2}$ இவைகளை நன்ருக இடித்து 4 சேர் பாலில் போட்டுக்காய்ச்சி வடிக்கட்டி அப்பாலில் மோரைவிட்டு உரைக்குத்தித் தயிராக்கி, அதை உடனே கடைந்து வெண்ணெய் எடுத்து, மிளகு பிரமாணம் காலையில் நாக்கில் தடவ மாடு விரைவாகும். கையில் அடங்காது.

Printed at Sri Nataraja Press, by M. V. Sundaresan, Kumbakonam.

போன் : 155

ரோஸ் மார்க் சீவல் ஸ்டோர்ஸ்

ஜெனரல் மார்ச்சண்ட்ஸ்

நெ. 9, மடத்துத்தெரு, கும்பகோணம்.



முதல்தரமான பாக்கு வகையருக்களும்

ஸ்பெஷல் சீவல் வகையருக்களும்

விலை நயமாகக் கிடைக்கும்

Prop.: J. பிலவேந்திரம்

பாக்டரி: விக்டோரியா குடியானத்தெரு, கும்பகோணம்.